# வர்ணம்

ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | வர்ணம் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் (Prajnan) |
| **மொழி** | : | தமிழ் |
| **வகை** | : | விழிப்புணர்வு |
| **முதற்பதிப்பு** | : | 2019 |
| **பக்கங்கள்** | : | 12 |
| **தாள்** | : | A4 |
| **எழுத்து அளவு** | : | 12 புள்ளிகள் |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |
| **விலை** | : | அகவிழிப்பு |

# வர்ணம்

பிரக்ஞன்

# வர்ணம்

சனாதன தர்மம் வகுத்துக் கொடுத்த வாழ்வியல் நெறி முறைகளில், நம்மிடையே காணப்படும் வர்ணாசிரம தர்மங்கள் மற்றும் ஆசிரம தர்மங்கள் (பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம் மற்றும் சந்நியாஸம்) போன்றவைகள் மிக முக்கிய பங்கு வகுக்கின்றன. இந்த வாழ்வியல் நெறிமுறைகளை நன்கு கற்றுணராத சில அரைகுறை ஆட்களினால் உண்டாக்கப்பட்ட கல்விமுறையில் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான களங்கங்களை எல்லாம், தற்போதைய நம் நடைமுறை வாழ்க்கையில் நன்றாகவே காணமுடிகின்றது.

இங்கு, "**வர்ணம்**" என்றால், '**நிறம்**' என்று பொருள் கொள்ளலாம். இந்த வர்ணத்திற்கு பிறப்பிடம் '**குணம்**' என்பதை வேத சாஸ்திரம் எடுத்துரைக்கின்றது. அத்தகைய குணங்கள் மனிதனிடம் மூவகைகளில் காணப்படுகின்றன. அவைகளை, **சத்வம், ராஜஸம், தாமஸம்** என்று அழைக்கப்படுகின்றது.

இதிலே, சத்வகுணம் – **வெண்மை**, ராஜஸகுணம் – **சிவப்பு,** தாமஸகுணம் – **கறுப்பு**.



இவைகளை குணம் மற்றும் செயல்களின் அடிப்படையில், சாஸ்திரம் நான்கு வகைகளாகப் பிரித்துக் காட்டுகின்றது.

இதில் சத்வகுணம் அதிகமாகவும், ரஜோகுணம் குறைவாகவும் கொண்டவன் **ப்ராமணன்.** ரஜோகுணம் அதிகமாகவும், சத்வகுணம் குறைவாகவும் கொண்டவன் **சத்திரியன்.**

அடுத்து, ரஜோகுணம் அதிகமாகவும், தமோகுணம் குறைவாகவும் கொண்டவன் **வைசியன்.** தமோகுணம் அதிகமாகவும், ரஜோகுணம் குறைவாகவும் கொண்டவன் **சூத்திரன்** என்ற அடிப்படையிலே, இந்த மூன்று வர்ணங்களை அடிப்படையாகக் கொண்டு, நால்வகை மனிதர்களை நமக்கு அடையாளம் காட்டுகின்றது சாஸ்திரம்.

அத்துடன் வர்ணங்கள் என்கின்ற நிறத்தின் அடிப்படையில், நான்கு நிறங்களையும் மூன்று குணபேதங்களாக சுட்டிக்காட்டுகின்றது சாஸ்திரம். அந்தவகையிலே, வெண்மை நிறம் **ப்ராமணன்** என்றும், சிவப்பு நிறம் **சத்திரியன்** என்றும், மஞ்சள் நிறம் **வைசியன்** என்றும், கருப்பு நிறம் **சூத்திரன்** என்றும் சொல்கின்றது.

**வெண்மை** – வெள்ளை அல்லது வெண்மை நிறம் சமாதானத்திற்கு மட்டுமல்லாது, தூய்மை, நன்மை, பாதுகாப்பு, புத்திசாலித்தனம், வெளிச்சம், புரிதல், நம்பிக்கை, நேர்மை, பணிவு, கருணை மற்றும் அமைதி போன்றவற்றுடனும் தொடர்புடையது.

**சிவப்பு** – சிவப்பு நிறம் பேரார்வத்தின் நிறம் என்பதினால், எல்லாவற்றையும் தனதாக்குகின்ற ஆசையின் தீப்பிழம்புகளைக் கொண்ட அனல்பொறிகளைத் தூண்டுகிறது. அத்துடன் காதல் மற்றும் உணர்ச்சியின் உணர்வுகளை ஒளிரச் செய்கிறது. அதன் உயிரோட்டமான ஆற்றல், தன்னம்பிக்கை மற்றும் வலிமையை வெளிப்படுத்துவதால், அனைத்திலும் தைரியமாகச் செயல்படவும், அவர்களின் இலக்குகளைத் துரத்தவும் தூண்டுகின்றது. மேலும், அதர்மத்தை தலைத்தூக்க விடாமல், அவைகளை தடுப்பதில் காட்டுகின்ற கோபத்தையும் இந்த சிவந்த நிறம் காட்டுகின்றது.

**மஞ்சள்** – மஞ்சள் நிறம், சூரிய ஒளி, நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் நிறம், முரண்பட்ட தொடர்புகளைக் கொண்டுள்ளது. ஒருபுறம் மஞ்சள் என்பது புத்துணர்ச்சி, மகிழ்ச்சி, நேர்மறை, தெளிவு, ஆற்றல், நம்பிக்கை, ஞானம், நினைவாற்றல், அறிவுத்திறன், மரியாதை, விசுவாசம் மற்றும் மகிழ்ச்சியைக் குறிக்கிறது. ஆனால் மறுபுறம், இது கோழைத்தனத்தையும் வஞ்சகத்தையும் குறிக்கிறது. வியாபாரத்தில் விவேகத்துடன் விற்பனை நுணுக்கங்களை கையாளுவதில் கைத்தேர்ந்தவர்களை இது குறிக்கின்றது.

**கறுப்பு** – கருப்பு அல்லது கறுப்பு என்பது, நிறங்களின் இல்லாமையக் காட்டுகின்றது. அதிலே, ஒன்றுமே இல்லாத சுத்தவெளி போன்றவற்றின் நிறம் கருப்பாகும். ஒரு பொருளானது, தன்மீது விழும் ஒளியை பிரதிபலிப்பதன் மூலம், குறிப்பிட்ட நிறத்தை உண்டாக்குகிறது. அப்படிபட்ட பொருள், தன்மீது விழும் ஒளியில் அனைத்து நிறங்களையும் உள்வாங்கிக்கொண்டு, எந்த நிறத்தையும் பிரதிபலிக்கவில்லையெனில், அங்கு கருப்பு நிறம் உண்டாகிறது. இந்த நிறம் எல்லாவற்றையும் தாங்குகின்ற **வெட்டவெளி** என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

ஆனால், வர்ணத்தின் அடிப்படையில் ஜாதிகள் என்பது, பிற்காலத்தில் ஏற்பட்ட சமூக மற்றும் தொழில் சார்ந்த அமைப்புகள் மட்டும்தானே தவிர, மற்றவர்களால் கூறப்படுவதுப் போன்று, இன துவேஷங்களுக்காக பரிந்துரைக்கப்பட்டவைகள் அல்ல.

சனாதன தர்மத்தில், வர்ணம் என்பது வலியுறுத்தப்படுகிறது. முதன் முதலாக ரிக் வேதத்தின், புருஷ சூக்த்தத்திலும் இது சொல்லப்படுகிறது. மனு தர்மமும் இதைத்தான் வலியுறுத்துகிறது. புராணங்களும் இதைத்தான் சொல்கின்றன.

**வர்ணம் என்றால் என்ன?**

வர்ணம் என்பதற்கு தன்மை, வகை, தரம் அல்லது பிரிவு எனப் பொருள்படுகிறது. அது நான்கு வகைப்படுகிறது.

<u>புருஷ சூக்த்தத்தில் வரும் ஸ்லோகம்:</u>

"பிராமணஸ்ய முகமாஸீத்,
பாஹூ ராஜன்ய: க்ருத:
ஊரு ததஸ்ய யத்வைஸ்ய:
பத்ப்யாகும் சூத்ரோ அஜாயத" – (ரிக் வேதம் 10–90–12)

ப்ராமணன் எனும் தன்மை உண்மையில் **"பிறப்பால் உயர்ந்த ஜாதி!"** என்று எந்த சாஸ்திரமும் கூறவில்லை. ப்ராமணன் என்றால், ப்ரம்மத்தை உணர்ந்தவன் என்று மட்டும்தான் **சனாதன தர்மம்** கூறுகின்றது. அந்த ப்ரம்மத்தை யார் உணர்ந்தாலும், அவர்கள் ப்ராமணர்களே. அந்த அடிப்படையிலேயே இங்கு ப்ராமணன் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் அவனுக்கு உதவி புரிபவர்கள் என்றும் கூறப்பட்டதே தவிர, பிறப்பால் ப்ராமணன் உயர்ந்தவன் மற்ற சாதிகளில் உள்ளவர்கள் அவனுக்கு கீழே உதவி புரிபவர்கள் என்று எங்குமே சாஸ்திரம் கூறுவது கிடையாது.

இதை நன்கு கற்றுணராத சில கயவர்களால் இவ்வாறு மக்களிடையே புகுத்தி வைக்கப்பட்டு, பிரித்தாலும் சூழ்ச்சி கொண்டு வரப்பட்டது. இதனை, ஆங்கிலேயர்களால் திட்டமிட்டு, கல்வி முறையில் கொண்டுவரப்பட்டு, பள்ளிக்கூடங்களில் குழந்தைகளை சேர்க்கும்போதே, அவர்களுக்கான சாதிகள் கேட்கப்பட்டு, அதன்வாயிலாக, பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வியிலும், பள்ளிகளிலும் பல சலுகைகள் கொடுப்பதுப்போலக் காட்டிக் கொண்டு, பிற்காலத்தில், இவர்களுடைய ஒற்றுமையை குழைத்து, இவர்களுக்குள் சாதிகளால் பிரிவினைகள் தூண்டப்பட்டு, இனப்படுகொலைகளுக்கு காரணமான விதைகள் விதைக்கப்பட்டது.

ஆனால், அத்தகைய ஆங்கிலேயர்களால் உண்டாக்கப்பட்டதை, இன்றுவரை எந்த அரசியல்வாதிகளும் மாற்றாமல், அப்படியே வைத்துக் கொண்டதற்குக் காரணம், இவர்களும் இதன்வாயிலாக **சாதி, இனம், மதம்** என எல்லாவற்றிலும் இன்றைய அரசியல் செய்வதற்கு ஏற்றவாறு, சாதி, மத அரசியலுக்காக அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டது.

இதிலே, விவேகத்தால் விழித்துக் கொண்டவனைத்தான் **ப்ராமணன்** என்கிறோம். அதாவது, இந்த பொருள்சார்ந்த உலகத்திலே, இதுப்போன்ற ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான மன மயக்கத்தினால் மயங்கி விடாமல், தன்(பரம)னைப் பற்றிய விழிப்புணர்வுடன் விழித்துக் கொண்டவன் மட்டுமே **ப்ராமணன்** எனப்படுகின்றான்.

அவன் மட்டுமே, தர்மத்தை (அறத்தை) அனைவருக்கும் அறிவுறுத்துவதும், உண்மையில் எது உயர்ந்த தர்மம்? என்பதை எடுத்துக் கூறுவதிலுமுள்ள மிக உயரிய வேத விசயங்களை **ஆன்மவியல்** பாடங்களின் மூலம், அனைவருக்கும் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்பதில், ஆழமாக அறிவினால் அன்றாடம் உழைப்பவன் ப்ராமணன் ஆகிறான்.

அப்பேர்பட்ட ப்ரம்மத்தை உணர்ந்த உத்தம ப்ராமணன் முகமானது ஞான ஒளியில் பிரகாசமாக இருத்தல் வேண்டும். அதாவது, அவனது பார்வையில் நேர்மை, எண்ணத்தில் தூய்மை, வார்த்தையில் வாய்மை என எல்லாவகையிலும் தூய்மை பொருந்தியவனாக இருத்தல் வேண்டும். இவர்கள் மட்டுமே எல்லா உயிர்களிலும் தன்னைக் காண்கின்ற மிக உயரிய பண்பு நலன்களான **அன்பு, நன்றி, கருணை** கொண்டவனாக **மனித வடிவில் தெய்வம்** என்ற அடிப்படையில், சத்வ குணத்தை இது குறிக்கிறது.

சத்ரியன் என்பது, ஆளுமையை மற்றும் நிர்வாகத்தை குறிக்கிறது. தர்மத்தை காப்பாற்றுவதும், அதர்மத்தை எதிர்ப்பதும் இவர்களின் தலையாயக் கடமைகள். அதற்கான ஆக்கப்பூர்வமான கடமைகளில் ஈடுபடும்போது, அதர்மத்தை அழிக்க இவர்களது தோள்கள் வலிமை மிக்கதாகவும் இருக்க வேண்டியது மிகவும் முக்கியம். அப்போதுதான் அரசனால் போர்கலையில் சிறந்து விளங்கி, தனது குடிமக்களைத் திறம்பட காத்திட முடியும். சத்வகுணம் கலந்த ரஜோகுணம் அதிகம் உள்ளவர்களை இது குறிக்கிறது.

வைசியன் எனும் தன்மை நாட்டுக்கும், சமூகத்துக்கும் வாழ்வியல் தேவைக்காக பொருள் ஈட்டுவதை குறிக்கிறது. வைசியன் என்பவன் பொருளை ஈட்டும்போது, பிறர் வயிற்றுக்கு வஞ்சனை செய்யாமல், வியாபாரத்தில் நேர்மையானவனாக நல்ல தீர்க்கமாக வலிமையான தொடைகளைக் கொண்டு, வியாபாரத்தில் அமர்ந்து, சிந்தித்து நேர்மையான வாணிபத்தில் ஈடுபட வேண்டும். இது தமோகுணம் கலந்த ரஜோகுணம் கொண்டவர்களை குறிக்கிறது.

இதிலே, சூத்திரன் எனும் தன்மை மனிதனுக்குத் தேவையான அத்தியாவசியமான, அடிப்படைத் தேவைகளைக் கவனிக்கும் கடமையைக் குறிக்கின்றது. இவர்கள் வயல் வெளிகளில் பாடுபட்டு, இந்த உலக உயிர்களுக்கு பசியாற்ற வேண்டும் என்பதற்கான வலிமையான பாதங்கள் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இதில், சூத்திரன் அல்லது சூத்திரதாரி என்றால், மற்றவர்களுக்கு நேரிடையாக வெளிப்பாடாமல், தன்மூலம் வெளிப்படுத்திய விசயங்களுக்கு பின்புலமாக இருப்பவன் என்பதினால், இவர்களது பங்கு பெரும்பாலும் உணவு உற்பத்தியிலும், நாட்டைக் காப்பதிலும், நல்லவர்களுக்கு உதவுவதிலும் உள்ளது.

சூத்திரன் என்பவன் எல்லா உயிர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று, உணவு உற்பத்தி, தேசிய பாதுகாப்பு, போன்ற சேவைகள் செய்வதற்கு ஆதாரமாய், அடிப்படையாய் இருப்பவன் என்பது பொருள். ஆக, சூத்திரன் என்பவன் அனைத்துக்கும் ஆதாரமானவன் என்பதினால், அவனை அவனது சொந்தக் கால்களால் நிற்பவன் என்கின்றது சாஸ்திரம்.

இதிலே மற்ற மூன்று வர்ணத்தாருக்கும் இவன் மட்டுமே ஆதாரமாய் இருந்துக் கொண்டு, அவர்களுக்கு உதவுகிறான். இவனிடம் ரஜோகுணம் கலந்த தமோ குணத்தை அதிகம் காணலாம்.

இதிலே, பிறப்பால் **உயர்வு – தாழ்வு** என்ற விசயம் எங்கேயும் வரவில்லை. ஆகவே, பிறப்பால், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பேதமைகள் எப்போதுமே இல்லை. ஆக, பிறப்பால் வர்ணங்கள் இல்லை! என்கிறது மனு தர்மம்.

<u>அதற்கான ஸ்லோகம்:</u>

**"ஜன்மனா ஜாயதே சூத்ர: கர்மணா த்விஜ ஜாயதே**
**வேதப் பாராயணே விப்ர: ப்ரஹ்மஜ் ஞானேதி பிராஹ்மண:"**

அதாவது, பிறப்பால் அனைவரும் சூத்திரர்களே, செய்யும் செயல்களால்தான் இவர்களை இவ்வாறு கூறுவதால், **"இரு பிறப்பாளர்கள்"** (துவீஜம்) என்கின்றது சாஸ்திரம். மேலும், வேதப் பாராயணம் செய்வதினால், அடைந்த ஆத்ம ஞானத்தினால் இவர்கள் **ப்ராமணர்கள்** எனப்படுகின்றார்கள். இதனையே வள்ளுவரும், தமது திருக்குறளில் கூறும்போது,

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.** – இவ்வாறு சுட்டுக் காட்டுகின்றார்.

ஆக, ப்ரம்மத்தை உணர்ந்துக் கொண்ட பிராமணன் என்பவன் தன்னையே உணர்ந்துக் கொண்ட காரணத்தினால், மற்றவர்களை விட மிகச் சிறந்தவனாகின்றான். அதனால்தான் அவனை **விராட் புருஷன்** எனும் பரம்பொருளுக்கு தலையாக இருக்கிறான் என்று சாஸ்திரம் கூறுகின்றது.

இவர்களைப்போன்று தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகளையும், மக்களையும் காக்கின்றவன் சத்ரியன் என்பதினால், இவனே வலிமைக் கொண்ட தோள்களை உடையவன் என்றும், இவனே தர்மத்தை நிலைநாட்டி, அதர்மத்தை அழிப்பதற்கு அனைவருக்கும் உறுதுணையாக நிற்கின்றான் என்பதினால், இவர்களை தோள்களுக்கு உதாரணமாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அடுத்து, வைசியன் என்பவன் இந்த ஒட்டுமொத்த மனித சமுதாயத்தையும் தாங்கிப் பிடிப்பவன் என்பதாகப் பார்க்கப்படுகின்றது. இவன் வாயிலாகத்தான் நம்முடைய மனிதகுலம் வளர்ச்சி அடைகின்றது. இந்த உலகில் வாழுகின்ற அடிமட்ட கூலித்தொழிலாளிகள் முதல் நாடாளும் அரசர்கள் வரை அனைவருக்கும் தேவையான அனைத்து அத்யாவசியப் பொருள்களை வழங்குவதில், இவர்களது பணி இன்னும் சிறப்பாக இருக்கவேண்டும் என்பதினால், இவனை உடலின் நடுப்பகுதியாக வயிறு மற்றும் தொடைப் பகுதிகளை சுட்டிக் காட்டுவதாக உள்ளது. அதற்குக் காரணம், ப்ராமணர்களுக்கும், அரசர்களுக்கும் பலவகைகளில் பொருளாதார உதவிகள் புரிந்து, அவர்கள் வயிற்றை குளிர்விக்கின்ற உத்தம தொழிலதிபர்களைத்தான் வைசியன் என்கின்றோம்.

அடுத்து சூத்திரன் என்பவன் இவர்கள் மூவருக்கும் ஆதாரமாக இவர்களை எல்லாம் தாங்கிப் பிடிப்பவன் என்ற அடிப்படையில், அனைத்துக்கும் ஆதாரமாய் இருக்கும் கால்களாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆக, இந்த உடல் என்னும் கருவியில் **"எண்சான் உடலுக்கு சிரசே பிரதானம்!"** என்பதினால், ப்ராமணன் தலை என்றும், இந்த தலையையே தாங்கிப் பிடிப்பது சத்திரியனின் தோள்கள் என்றும், இவர்கள் இருவருக்கும் பக்கபலமாக இருக்கும் வைசியன் வயிறு அல்லது தொடைகள் என்றும், இவர்கள் மூவர்களையும் தாங்குகின்ற சூத்திரன் என்பவனை கால்கள் என்றும் உவமானமாகக் கூறப்பட்டதே தவிர, இங்கு யாரையும் இழிவுபடுத்த வேண்டும் என்று சாஸ்திரம் அவ்வாறு கூறவில்லை.

இதை ஏன்? ஒரு உடல் ரீதியான அங்கங்களாய் பாவித்தார்கள். உடலில் எந்த அங்கமும் தேவையற்றது இல்லை, ஒவ்வொன்றும் இன்றியமையாத ஒவ்வொரு பணியை செய்கின்றன என்பதை குறிப்பிடத்தான் அவ்வாறு கூறினார்கள்.

இங்கே மிக முக்கியமாய் நாம் உணர வேண்டியது, வர்ணம் என்பது பிறப்பை மட்டுமே சார்ந்ததல்ல. ஒரு நல்ல குலத்தில் பிறப்பதால், ஒருவனுக்கு நல்லதை செய்யும் சூழ்நிலை உருவாவது இயற்கை. ஆனால், அவன் தன் செயல்களால் வர்ணங்களில் இருந்து வழுவலாம் அல்லது உயரலாம் இதுவே தர்மம். இந்த தர்மத்தை புரிந்துக் கொள்வதுதான் ஞானம்.

மஹாபாரதத்தில் **அஸ்வத்தாமன்** எனும் பிறப்பால் ப்ராமண குலத்தில் பிறந்தவன் என்று கூறிக் கொண்டவன், தன்னுடைய தீய செயல்களால் தாழ்ந்த வர்ணத்திற்கு தடம் மாறுகின்றான். அவ்வாறே, சத்திரியகுலத்தில் பிறந்ததாக கூறிக்கொண்ட விஸ்வாமித்திரரோ தன்(பரம)னை அறியும் அரிதான முயற்சியால் பிராமணனாக உயர்கின்றார்.

ஆக, இத்தகைய வர்ண கலப்பில் பிறந்த பலரும் மிகப் பெரும் ஞானிகளாய் இருப்பதும் நம்மால் பார்க்க முடிகின்றது. பிறப்பால் இன்று ப்ராமணன் என்று கூறிக்கொள்கின்ற பலரும், அந்த தூய அறிவாகிய பரம(தன்)னை உணராமல், பலவிதமான தொழில்களை செய்பவர்களான வைசியர்களாக மாறி இருப்பதையும், இன்றைய நடைமுறையில் இருப்பதுப் போலவே எல்லாக் காலங்களிலும் பார்க்க முடிகின்றது.

அதுப்போலவே, பிறப்பால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறப்பட்டவர்களில் வேத வியாசரும், விதுரரும் அவர்கள் அடைந்த மிக உயரிய ஞானத்தினால், ப்ரம்மத்தை உணர்ந்த பிரம்ம ஞானிகளாக, ப்ராமணர்களாக மாறி நிற்பதையும் நம்மால் பார்க்க முடிகின்றது.

ஆகவே, சூத்திரன் என்கிற தன்மையில் (ஜாதியில் அல்ல) பிறந்து, தன் முயற்சியால் ஒருவன் ப்ரம்மத்தை உணர்ந்த பிராமணனாகவும் ஆகலாம். ப்ராமணன் என்கின்ற தன்மையில் வியாபாரம் செய்கின்ற வைசியனையும் பார்க்கலாம். வைசியன் என்பவன் நாடாளும் அரசனாகவும் மாறலாம். அவ்வாறே சூத்திரன் என்பவன் இவர்கள் மூவரில் எவராகவும் ஆகலாம் என்பதே, இங்கு எல்லோராலும், எல்லாக் காலங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விசயம்.

மகாபாரதக் கதையில் கர்ணண் சூத்திரனாக அவன் செய்யும் தேரோட்டும் தொழிலை வைத்துக்கொண்டு அவ்வாறு கருதப்படுகின்றான். ஆனால், அவனை அங்க தேசத்துக்கு அரசனாக மாற்றி, ஒரு நிமிடத்தில் அவன் வர்ணத்தை சத்திரியனாக துரியோதணன் மாற்றினான் என்பது, நமக்கு மகாபாரதம் சுட்டிக் காட்டுகின்ற மிகச் சிறந்த சான்று.

சாந்தோக்ய உபநிடதத்தில் சத்யகர்மாவின் கதை வர்ணம் என்பது குணங்களை தழுவி இருக்கிறதே தவிர, பிறப்பை தழுவி அல்ல! என்பதை ஆணித்தரமாக சொல்கிறது.

சத்யகர்மா ஒரு சாஸ்திரம் பயிலுகின்ற பிரம்மச்சாரியாக மாற விரும்புகிறான். அவன் தன் தாயிடம் தன் பிறப்பிற்கான வர்ணம் என்ன என்று கேட்டாலும், அவளுக்கு அவனின் தந்தை யார்? என்பது தெரியாது என்கிறாள்.

சத்யகர்மா **கௌதமர்** என்ற ரிஷியிடம் சென்று தன் தந்தை பெயர் தனக்குத் தெரியாது என்பதையும், தான் மிக உயரிய ஆத்மஞானத்தை அறிய ஆசையாக வந்திருப்பதாகவும் சொல்கிறான். அதைக்கேட்ட அந்த ரிஷி, உண்மையை மறைக்காமல் சொல்பவனும், சத்தியத்தை தேடி அலைபவனுமே, உண்மையில் **பிராமணன்** எனவும், ஆக அவன் யாரின் மகன் என்பது எனக்குத் தேவையில்லை என்றுகூறி, அவனை தன்னுடைய சீடனாக ஏற்றுக்கொள்கிறார்.


ஆகவே, நாம் இந்தப் பூமியில் எங்கு, எப்படி பிறந்தோம்? என்பவதைவிட, நாம் எப்படி வாழ விரும்புகின்றோம்? என்பதே, நாம் அனைவரும் அறிய வேண்டிய அவசியமான மற்றும் ஆழமான உண்மையாகப் பார்க்கப்படுகின்றது. அந்தவகையிலே, நாம் ஒவ்வொருவரும் எப்படி வேண்டுமானாலும் பிறந்திருக்கலாம். ஆனால், எதை விரும்பி, எப்படி செயலாற்றி, எதுவாக மாற விரும்புகின்றோம்? இந்த உலகில் உண்மையில் நாம் எப்படி வாழ வேண்டும்? என்பதே, இங்கு நாம் அனைவரும் அறிய வேண்டிய மிகவும் அரிதான விசயமாகப் பார்க்கப்படுகின்றது.

இதைத்தான் சனாதன தர்மத்தின் வேத, வேதாந்த சாஸ்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன. அவைகளைத்தான் நாம் **ஆன்மவியல் கல்வி** என்று அழைக்கின்றோம். நம்முடைய நடைமுறை கல்வியில் நாம் தொழில்கள் சார்ந்து பல பட்டங்களைப் பெற்றாலும், இந்த ஆன்மவியல் கல்வியைக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அத்தகைய தொழில்களில் **நேர்மை, நியாயம், தர்மம்** என எதையுமே, இந்த சமுதாயத்தில் எதிர்ப்பார்க்க முடியாது. அதற்குக்காரணம், இவர்களுக்கு அறம் (தர்மம்) என்றால் என்ன? என்பதும் தெரியவில்லை. ஆன்மா (பரமன்) என்றால் என்ன? என்பதும் புரியவில்லை. இவர்களது சுயநலமான வாழ்க்கை மட்டுமே இவர்களுக்கு உண்மையாகத் தெரிவதினால், எல்லாவற்றிலும் இன்று ஊழல் இருப்பதைப் பார்க்க முடிகின்றது.

நன்றி

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**


வர்ணம்
ப்ரக்ஞன்